**செய்தி வெளியீடு எண்: 084** **நாள்: 01.02.2018**

**செய்தி வெளியீடு**

இன்று (01.02.2018), தலைமைச் செயலகத்தில் அரசு ரப்பர் கழக தொழிலாளர்களின் ஊதியம் நிர்ணயம் செய்தல் தொடர்பான ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திண்டுக்கல் திரு.சி.சீனிவாசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அரசு ரப்பர் கழக தொழிலாளர்களின் ஊதிய முரண்பாடுகளை களைதல் தொடர்பாகவும், தற்போதைய வருவாய்–செலவின விவரங்கள், ரப்பர் தோட்டத் தொழிலாளர்களின் நலனை பாதுகாத்தல் மற்றும் ரப்பர் தோட்டங்களை பாதுகாப்பது குறித்து ஆலோசனை நடத்தப்பட்டது. மேலும் வனத்தினை சார்ந்து வாழும் மக்களின் வாழ்வாதாரங்களை பாதுகாக்கவும், அதே நேரத்தில் அவர்களின் தொடர் மேம்பாட்டிற்கான சிறப்பு முயற்சிகளை வனத்துறை எங்ஙனம் மேற்கொள்வது என்பது பற்றியும் விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை முதன்மை செயலர் திரு.முகமது நசிமுத்தின், இ.ஆ.ப., அவர்கள், தமிழக அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி திரு. தளவாய் சுந்தரம் அவர்கள், மாநிலங்களவை உறுப்பினர் திரு அ. விஜயகுமார் அவர்கள், விளவங்கோடு சட்டமன்ற உறுப்பினர் திருமதி எஸ். விஜயதாரணி அவர்கள், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (துறைத்தலைவர்) முனைவர் ஹி.பசவராஜு, இ.வ.ப., அவர்கள், அரசு ரப்பர் கழகத்தின் தலைவர் திரு. அமித் அஸ்தானா, இ.வ.ப., அவர்கள், நிர்வாக இயக்குநர் திரு ராகேஷ் குமார் டோக்ரா, இ.வ.ப., அவர்கள், பொது மேலாளர் திரு நிஹார் ரஞ்சன், இ.வ.ப., அவர்கள், சென்னை தொழிலாளர் நலத்துறை கூடுதல் துணை ஆணையர் திருமதி சுமதி அவர்கள், நாகர்கோயில் தொழிலாளர் நலத்துறை துணை ஆணையர் திரு எஸ். சுடலைராஜ் மற்றும் ஆறு அரசு ரப்பர் கழக தொழிற்சங்க பிரதிநிதிகள் கலந்துக்கொண்டார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 01.02.2018**